**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.472/2014**

**தேதி : 17.07.2026**

**(வா.சா.2 ) – திரு. நாகராஜன்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (1ம் பிரதிவாதி தரப்பில்)**

1. நான் பழனி தேவஸ்தான மலைக்கோவிலில் மணியமாக வேலை பார்த்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்கு வாதி தமிழரசி அழைத்து வந்தார். வாதி தமிழரசியின் மகனும் நானும் ஒரே அலுவலகத்தில் வேலை பார்க்கிறோம். அங்கணன் என்ற நபர் அவருடைய மருமகள் தமிழரசிக்கு உயில் எழுதிவைத்தது சம்பந்தமாக சாட்சியமளிக்க வந்துள்ளேன். அங்கணனுக்கு குழந்தைகள் இல்லை என்றால் ஆம். அங்கணனின் மனைவி பெயர் ஈஸ்வரி. அவர் தற்போதும் உயிருடன்தான் உள்ளார். உயிலில் அங்கணன் வீட்டில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன். மதியம் சுமார் 1.30 முதல் 2.30 மணிக்குள் கையொப்பம் செய்தேன். அந்த உயிலை மோகன் என்பவர் மதனபுரம் அங்கணன் வீட்டில் வைத்து எழுதினார். உயிலை கையில் எழுதினார்.

2. உயிலில் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்று சரியாக ஞாபகமில்லை. அங்கணன் கையெழுத்து செய்தார். கைரேகை வைக்கவில்லை. அங்கணன் இறந்த பின்னர் மேற்படி உயிலை நான், வாதி, வாதியின் மற்றும் சாட்சிகள் அனைவரும் சேர்ந்து உற்பத்தி செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. உயில் எழுதும்போது ஈஸ்வரி இருந்தார். ஈஸ்வரி தமிழரசிக்கு அத்தை ஆவார். உயில் எழுதியரே எனக்கு நேரடியாக தெரியாது என்றும், உயிலே அங்கணன் எழுதவில்லை என்றும், வாதி கேட்டுக்கொண்டதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

RAJA B — Digitally signed by RAJA B Date: 2026.07.17 16:22:13 +0530

Additional Sub Judge,
Palani.